டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.08.2026 புதன்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 047 - Madurai | Online Edition

வேளாண் துறை மாணவர்களுக்கு தேசியக் கல்வி உதவித் தொகை விடுவிக்கப்பட்டது

புது தில்லி, ஆக.11

தேசியக் கல்வி உதவித்தொகை இணையதளம் மூலம் நாடு முழுவதும் வேளாண் துறை மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை மத்திய வேளாண், விவசாயிகள் நலன், ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் திங்கட்கிழமை அன்று விடுவித்தார்.

இந்த முன்முயற்சியின் கீழ் 6,000-க்கும் மேற்பட்ட மாணவர் களுக்கு நேரடிப்பயன் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் மொத்தம் ரூ.21.35 கோடி விடுவிக்கப்பட்டது. இந்தப் புதிய முன் முயற்சியின் வாயிலாக நேரடிப்பயன் பரிமாற்றம் மூலம் ஒவ்வொரு மாதமும் வேளாண் துறை மாணவர்கள் தாமதமின்றி தங்களுடைய கல்வி உதவித்தொகையைப் பெற முடியும்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், கல்வி உதவித்தொகை என்பது வெறும் நிதி உதவியாக மட்டுமின்றி, வேளாண் துறையைச் சார்ந்த கல்வியை வலுவடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது என்று தெரிவித்தார்.

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி நடந்தது

மதுரை, ஆக.11

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 10/08/2026 இல் நடைபெற்ற தேனீ வளர்ப்பு பயிற்சியில் விருதுநகர், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டத்திலிருந்து இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் என 11 பேர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேன் எடுக்கும் முறை, தேனீக்களை தாக்கும் பூச்சி நோய்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் கொம்புத்தேனீ மற்றும் கொசுத்தேனீ வளர்ப்பு முறைகள் பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இத்துடன் கொம்புத்தேனீ மற்றும் கொசுத்தேனீகளை வளர்க்கும் முறைகள் மற்றும் தேன் எடுக்கும் செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ், பூச்சியியல் துறை, வழங்கினார்.

மேலும் இப்பயிற்சியில் தேன் பதப்படுத்தும் முறைகள் மற்றும் தேனில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய செயல்முறை விளக்கமானது, முனைவர் கி.ஜோதிலட்சுமி, உணவியல் துறை, வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் செயல்முறை விளக்கம் மூலம் பயனடைந்தனர்.

இப்பயிற்சி நிறைவில் பங்கு பெற்ற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பங்கு பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப் பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பப் பண்ணைப் பள்ளி

சேலம், ஆக.11

சேலம் மாவட்டம், தலைவாசல் அருகே உள்ள நாவலூர் கிராமத்தில் ஆத்மா (ATMA) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பப் பண்ணைப் பள்ளி பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தலைவாசல் வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கி, நிலவி வரும் சூப்பர் எல் நினோ வெப்ப பாதிப்பிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கவும் வறட்சியைத் தாங்கி வளரச் செய்யவும் PPFM பாக்டீரியா கரைசலைப் பயன் படுத்துமாறு அறிவுறுத்தினார்.

வேளாண்மை அலுவலர் ஜானகி விவசாயிகள் அரசு திட்டப் பலன்களைப் பெற வேளாண் அடையாள எண் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தொடர்ந்து, பயிற்சியாளர் பிரவீன் நிலம் தயாரிப்பு மற்றும் தரமான விதை தேர்வு முறைகள் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் ரவிக்குமார் செயல் பட்டு வரும் மத்திய, மாநில அரசு மானியத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தனர். மேலும், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி மண் மாதிரி சேகரிப்பு குறித்துச் செயல் விளக்கம் அளித்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ் மற்றும் முத்துவேல் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இம்முகாமில் நாவலூர் பகுதியைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை

கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

வகை வகையான சூப் தொடர்...

சூப் செய்வது எப்படி?

13. பரங்கிக்காய் சூப்

தேவையான பொருட்கள்

பரங்கிக்காய் — 2 கப்

வெங்காயம் — 1

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

மிளகு தூள் – சிறிதளவு

உப்பு – தேவையான அளவு

செய்முறை

வேக வைத்து அரைத்து வெண்ணெயில் சேர்த்து 5 நிமிடம் கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

உலக உயிரி எரிபொருள் தினம் 2026

கோயம்புத்தூர், ஆக.11

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை, உலக உயிரி எரிபொருள் தினம் 2026 - 10.08.2026 அன்று 120 மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் பங்கேற்புடன் சிறப்பாகக் கொண்டாடியது.

கோயம்புத்தூர், புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறைப் பேராசிரியர் முனைவர் வி. பழனிசெல்வம் வரவேற்புரை நிகழ்த்தி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, அத்துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தே.ரமேஷ், வாழ்த்துரை வழங்கினார். அதில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் உயிரி எரிபொருட்களின் முக்கிய பங்கை அவர் வலியுறுத்தினார். கோயம்புத்தூர், வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் பி.ராஜ்குமார், விழாவிற்கு தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் அறிவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஆர்.ராஜ்குமார், '3G உயிரி எரி பொருட்கள்: போக்குகள் மற்றும் எதிர்கால வழிமுறைகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். குறிப்பாக பாசி மற்றும் பிற நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் 3G உயிரி எரிபொருட்கள், ஒரு சிறந்த தூய-ஆற்றல் தேர்வாக உருவெடுத்து வருவதன் முக்கியத்துவத்தை அவர் விளக்கினார். புதுப்பிக்க வல்ல ஆற்றல் பொறியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் பெ.மீனாட்சி, நன்றியுரை வழங்க நிகழ்ச்சி நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, மூன்றாம் ஆண்டு பி.டெக் (EEE/AGE) மாணவர்களால் தயாரிக்கப்பட்ட உயிரி எரி பொருளைக் கொண்டு விளக்குகள் ஏற்றப்பட்டது. இது தூய்மை யான மற்றும் பசுமையான எதிர்காலத்தை உருவாக்குவதில் இளைய தலை முறையினரின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக அமைந்தது. சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான புதுப் பிக்கவல்ல ஆற்றல் ஆராய்ச்சி, கல்வி மற்றும் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளை இந்நிகழ்ச்சி பிரதிபலித்தது.

பட்டா எண்களை இணைக்க வேளாண்மைத்துறை அறிவுரை

திருவள்ளூர், ஆக.11

விவசாயிகள் தங்கள் பெயரில் உள்ள நிலங்களின் அனைத்து பட்டா எண்களையும் விவசாய அடையாள எண்ணில் சேர்க்க திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம் வேளாண்மைத் துறை அழைப்பு விடுத்துள்ளது. விவசாயி ஒருவருக்கு பல பட்டாக்கள் இருந்தாலும் அவர் ஒரு பட்டாவில் உள்ள நிலத்தை மட்டுமே பதிவு செய்து விவசாய அடையாள எண் பெறுகிறார். மீதமுள்ள நிலங்களில் உள்ள விவரங்களை வேளாண் துறை அலுவலர்கள் உதவியுடன் பதிவு செய்ய வேண்டும் என வேளாண் துறையினர் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர். சில விவசாயிகள் தங்களது நிலங்களில் ஒரு பட்டாவை மட்டும் பதிவு செய்து அடையாள எண் பெற்றுள்ளனர். அதாவது பல பட்டாக்கள் இருந்தாலும் அவர் ஒரு பட்டாவில் உள்ள நிலத்தை மட்டுமே பதிவு செய்து பதிவு எண் பெறுகின்றனர். தங்களது மீதமுள்ள இடங்களில் உள்ள விவரங்களையும் பதிவு செய்து பட்டா எண் பெற வேண்டும்.

எனவே விவசாயிகள் தங்களுடைய அனைத்து பட்டாக்கள் ஆதார் எண் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மொபைல் ஆகியவற்றுடன் வேளாண்மை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு அனைத்து பட்டாக்களையும் விவசாயி அடையாள எண்ணில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் மத்திய மாநில அரசு வேளாண் திட்டங்கள் வாயிலாக மானியம் பெறவும் பயிர் கடன்கள் உர வினியோகம் உள்ளிட்ட அரசு நலத்திட்டங்கள் பலன்களை பெறவும் முடியும். இதனை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடேசன் தெரிவித்தார்.


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

எலுமிச்சையில் காற்றுப்பதியம் விவசாயிகளுக்கு மாணவர்கள் செயல்விளக்கம்

தென்காசி, ஆக.11

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் வட்டாரம், தாருகாபுரம் கிராமத்தில், கிராமத் தங்கல் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, கலசலிங்கம் பல்கலைக்கழக இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் பத்ம ஸ்ரீ ஜோதி.ச, கமலேஸ்வரி.அ, அபர்ணா தேவி.ரா, பிரியதர்ஷினி.பூ, யாழினி.த மற்றும் ஞானமதி.கு ஆகியோர் விவசாயிகளுக்கு எலுமிச்சை மரத்தில் காற்றுப்பதியம் (Air Layering) செய்யும் முறையை செயல்விளக்கமாக செய்து காண்பித்தனர்.

நிகழ்ச்சியில், காற்றுப்பதியம் என்பது தாய் மரத்துடன் இணைந்திருக்கும் கிளையிலேயே வேர்களை உருவாக்கி, பின்னர் அந்தக் கிளையைத் தனியாகப் பிரித்து புதிய எலுமிச்சை செடியாக வளர்க்கும் எளிய தாவரப் பெருக்க முறை என்று மாணவர்கள் விளக்கினர். இம்முறையின் மூலம் தரமான தாய் மரத்தின் பண்புகளைத் தக்க வைத்துக் கொண்டு, விரைவாக புதிய செடிகளை உருவாக்க முடியும் என்பதையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும், 10 முதல் 18 ஆண்டுகள் வயதுடைய ஆரோக்கியமான எலுமிச்சை மரத்தில் நல்ல வளர்ச்சியுள்ள, பென்சில் தடிமனுடைய கிளையைத் தேர்வு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிளையில் குறிப்பிட்ட பகுதியில் உள்ள பட்டையை வளைய வடிவில் கத்தியால் அகற்றி, அந்தப் பகுதியைச் சிறிது சுரண்டி தயார் செய்யும் முறையை மாணவர்கள் செய்து காண்பித்தனர். பின்னர் தேங்காய் நார்க்கழிவை 30 நிமிடங்கள் தண்ணீரில் ஊற வைத்து, அதனை மண்ணுடன் கலந்து ஈரப்பதமான பதியப் பொருளாகத் தயாரித்து, பட்டை அகற்றப்பட்ட கிளைப் பகுதியைச் சுற்றி நன்றாகப் பொருத்தினர்.

அதன் பின்னர் அந்தப் பகுதியை பிளாஸ்டிக் கவரால் முழுமையாக மூடி, நூல் கொண்டு இறுக்கமாகக் கட்டும் முறையையும் செயல்விளக்கமாக செய்து காட்டினர்.

பதியம் செய்த பின்னர், அந்தக் கிளையை தாய் மரத்திலேயே சுமார் 40 நாட்கள் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்றும், இந்தக் காலம் முழுவதும் பதியப்பட்ட பகுதியில் ஈரப்பதம் குறையாமல் தொடர்ந்து தண்ணீர் தெளிக்க வேண்டும் என்றும் மாணவர்கள் விளக்கினர்.

சுமார் 40 நாட்களுக்குப் பிறகு பதியப்பட்ட பகுதியில் வேர்கள் நன்கு உருவானதும், வேர் களுக்கு சேதம் ஏற்படாதவாறு அந்தக் கிளையை தாய் மரத்தி லிருந்து தனியாக வெட்டி அகற்ற வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

தனியாகப் பிரிக்கப்பட்ட வேருள்ள கிளையை உடனடியாக வயலில் நடாமல், நிழலான இடத்தில் நாற்றங்கால் போன்று வைத்து பராமரித்து, ன்கு வளர்ந்த பின்னர் வயலுக்கு மாற்றி நட வேண்டும் என்றும் மாணவர்கள் விளக்கினர்.

இதன் மூலம் தாய் மரத்திலிருந்து புதிய எலுமிச்சை செடியை உருவாக்கி, அதனை தொடர்ந்து வளர்த்து பயனுள்ள மரமாக மாற்ற முடியும் என்பதை விவசாயிகளுக்கு விளக்கினர்.

இந்த செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் காற்றுப்பதியம் செய்வதற்கான கிளைத் தேர்வு, பதியம் செய்யும் முறை, 40 நாட்கள் பராமரிப்பு, வேர்கள் உருவான பின்னர் கிளையைப் பிரித்தல் மற்றும் புதிய செடியை வளர்த்து வயலில் நடுதல் ஆகியவற்றை நேரடியாகக் கண்டு அறிந்து கொண்டனர்.

நிகழ்ச்சி விவசாயிகளுக்கு எளிமையான முறையில் எலுமிச்சை செடி பெருக்கம் குறித்த நடைமுறை அறிவை வழங்கும் வகையில் அமைந்தது.

மண்புழுக்கள் மண்ணில் உருவாக்கும் வேதியியல் விளைவுகள்

● மண்புழுக்கள் மண்ணின் வேதியியல் கலவையினை மாற்றுகின்றன.

● மண் பரப்பில் உள்ள இலைக் கழிவுகளையும், இதர அங்ககப் பொருட்களையும் அதிகப்படியாக உட்கொள்வதால் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை விநியோகம் செய்யவும் கடத்தவும் உதவுகின்றன.

● மண் புழுக்கள் அங்ககப் பொருட்களை மண்ணின் அடி மட்டத்திற்கு எடுத்துச் செல்ல உதவுகின்றன. அதேவேளையில் பெரும்பாலான அங்ககப் பொருட்கள் உட்கொள்ளப்பட்டு, சிதைக்கப்பட்டு பின் வெளியேற்றப்படுகின்றன.

● மண்ணின் கார அயனி மாற்று திறன், மொத்த அங்ககப் பொருட்கள், மாற்றத்தகுந்த மொத்த கார அயனிகள், மணிச்சத்து, மாற்றத்தகுந்த சாம்பல் மற்றும் மாங்கனிசு சத்து, மாற்றத்தகுந்த சுண்ணாம்புச் சத்து போன்றவை அதிகரிக்கின்றது.

● பாக்டீரியாக்களின் எண்ணிக்கையும், மண்ணின் காற்றோட்டமும் அதிகரிப்பதால் நைட்டிரிபிகேனுக்கு இவை சாதகமாக உள்ளன. மண் புழுக்களின் தசை புரதச்சத்து நிறைந்ததாக இருப்பதால் இவை சிதைவுறும் வேளையில் நைட்ரேட், நைட்ரஜனை மண்ணிற்குக் கொடுக்கும் தன்மையுடையது.

● மேலும் கரையும் நிலையில் உள்ள தழைச்சத்து நுண்ணுயிர்களிலுள்ள புரதமாக மாற்றப்படுகிறது.

● இவ்வாறு மாற்றப்படுவதால் தழைச்சத்து நீரில் கரைந்தழியும் நிலையிலிருந்து பாதுகாக்கப்படுகிறது.

● மண்புழுவின் 20-40 செ.மீ துளையிடு மண்டலத்தில் உள்ள மண்ணில் 40 சதம் காற்று வாழ் தழைச்சத்து நிலைநிறுத்திகள், 13 சதம் காற்றற்ற நிலைவாழ் தழைச்சத்து நிலை நிறுத்திகள் 16 சதம் தழைச்சத்து நீங்கிகள்ஆகியவை உள்ளன.

● புழு கழிவு திரட்டில் கரிம மற்றும் தழைச்சத்து விகிதாச்சாரம் சுற்றியுள்ள மண்ணை விட அதிகமாக இருக்கின்றது.

இவ்வாறு விவசாயிகள் பயனடையுமாறு தாரமங்கலம் வேளாண்மை துறை மூலம் கேட்டுக் கொள்கிறோம்.

அறிவியலால் வளர்ந்த வேளாண்மை

காலம் தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும் என்பதற்கிணங்க, காலத்துக்கு தகுந்தாற்போல வேளாண்மையின் தேவையை கட்டமைத்தில் அறிவியலுக்கும் பெரும் பங்கு உண்டு. இன்னும் சொல்ல போனால் அரசியல்,

அறிவியல் ஆகியவற்றுடன் இணைந்த பின்பு தான் வேளாண்மையின் மதிப்பு பரவலாக அதிகரிக்கத் தொடங்கியது இதனுடைய பின்னணியை பார்ப்போம்.

1840களில் பயிர் வளர்ச்சிக்கு கனிம ஊட்டச்சத்துகள் அடிப்படையானவை என கண்டறிந்த ஜெர்மன் வேதியிய லாளர்கள் யூஸ்டுஸ் வான் லிபிக் முதல் 20ஆம் நூற்றாண்டில் பயிரின் வளர்ச்சி, நோய் எதிர்ப்பு தன்மையை வளப்படுத்திய கிரகோர் மெண்டல் (GREGOR MENDEL) வரை பலர் வேளாண் அறிவியலுக்கு பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளனர்.

மெண்டல் விதி

மெண்டலின் மறைவுக்கு பின்பு தான், அவர் கண்டறிந்த மரபுப்பேற்று விதிகளை (MENDELS LAW OF INHERITANCE) ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டனர். 1856-63 ஆம் ஆண்டு களுக்கு இடையே 28000 பட்டாணிச் செடிகளை ஆய்வுக்கு உட்படுத்தி வளர்த்ததுடன் செடிகளின் உயரம், இலைகளின் தோற்றம், பூக்களின் நிறம், விதைகளின் வீரியம்,செடிகளின் ஆரோக்கியம் ஆகியவற்றை கூர்ந்து கவனித்து அவற்றின் விபரங்களை சேகரித்தார். எவ்வாறு ஒரு தலைமுறை யி லிருந்து மற்றொரு தலைமுறைக்கு பண்புகள் கடத்தப்படு கின்றன என்பதை மூன்று விதிகளின் அடிப்படையில் கண்டறிந்தார்.

மெண்டலின் விதிகள்

1) ஆதிக்க விதி (LAW OF DOMINANCE)

பல தலைமுறைகள் வாழ்ந்த உயரமான பட்டாணிச் செடியையும், அதிக உயரம் இல்லாத பட்டாணி செடியையும் கொண்டு செயற்கையாக மகரந்த சேர்க்கை செய்த போது, நாளைடைவில் அதில் உயரமான பண்பு கொண்ட பட்டாணி செடிகள் வளர்ந்ததை வைத்து ஆதிக்க விதியை கண்டறிந்தார்.

2) பிரிவினை விதி (LAW OF SEGREGATION)

ஆதிக்க விதியில் கண்டறியபட்ட உயரமான செடிகளின் விதைகளை விதைத்து, தன்னிச்சையாக மகரந்த சேர்க்கை ஆன போது அதன் இரான்டாம் தலைமுறையில் 3 உயரமான செடிகளும், உயரம் குறைந்த ஒரு செடியும் கிடைத்தது வைத்து பிரிவினை விதியை கண்டறிந்தார்.

3) வரிசைபடுத்துதல் (LAW OF DEPENDENT ASSORTMENT)

மெண்டல் விதிகளுக்குப் மதப்பற்று விதி உருவானாலும், அவர் காட்டிய பாதையில் தற்போதும் உயிர்த் தொழில்நுட்பம் வழியே வேளாண் ஆய்வாளர்கள் பயணிக்கிறார்கள், உணவு தானியங்கள், தீவனம் நார் உற்பத்தியை அதிகரிக்க வைத் திருக்கிறார்கள்.

1950களில், வெறும் 50 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, தற்போது 357.73 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது அறிவியலால் வளர்ந்தது என்பது மிகையல்ல. இதற்கு முழுக்க முழுக்க பசுமை புரட்சி தான்.

வேளாண்மையில் புதிய புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதால் தான் இந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

கரூர், ஆக.11

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை. தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப் பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன், பிறரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். அதில் களை விதைகள், பிற பயிர் விதைகள், உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப் படுகிறது. ஈரப்பதம் என்பது பயிர் வாரியாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதில் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருந்தால் அதிக பூச்சி தாக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு தரம் குறைய வாய்ப்புள்ளது.

முளைப்புத்திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதைக்கும் குறிப்பிட்ட முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முளைப்புத் திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். விதைச்சட்டம் 1966 பிரிவு 7(பி) யின் படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கப் பட்டுள்ளது. இதன்படி நெல்லுக்கு 80 சதவிகிதமும், வீரிய மக்காச் சோளத்திற்கு 90%, கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, குதிரை வாலி, உளுந்து, துவரை, பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்கு 75%, நிலக்கடலைக்கு 70%, எள்ளிற்கு 80%, காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, வெங்காயம், கொத்தவரை, கீரை வகைகளுக்கு 70%, மிளகாய், பூசணி, பரங்கி, புடல், பாகல், பீர்க்கன், தர்பூசணிக்கு 60%ம் வெண்டை, கொத்தமல்லிக்கு 65 சதவிகிதமும் முளைப்புத் திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிறரக கலப்பு என்பது ஒரே பயிரில் பல்வேறு ரக விதைகள் கலந் திருப்பது ஆகும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிறரக கலப்பு இருந் தால் விதைகள் விற்பனைக்கு பரிந்துரைக்கப்படுவதில்லை. இதன் மூலம் வேளாண்மை துறையினரால் விதைப்பண்ணை அமைக்கப் பட்டு உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கும், தனியார் உற்பத்தி யாளர்களின் விதைகளுக்கும் விதைப்பரிசோதனை அடிப்படையி லேயே சான்று அளிக்கப்படுகிறது. இதன் மூலம் தரமான விதை களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பரிசோதனை முடிவுகள் பயன்படுகின்றன. விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதை களின் தரத்தை அறிய பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுகின்றன. விதைப்பரிசோதனை ஆய்வுக் கட்டணமாக பணி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80 மட்டும் வசூலிக்கப்படுகிறது. ஆய்வு செய்யக்கூடிய விதையினை கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூல மாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், முதல் குறுக்குத் தெரு, திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் என்ற முகவரிக்கு அனுப்பலாம். பணி விதை மாதிரிகள் விதை பரிசோதனை நிலையத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்பும் போது விதை மாதிரியின் அளவு நெல் விதை 50 கிராம், உளுந்து, பாசிப் பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம் காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, மிளகாய் – 10 கிராம், சுரை, பரங்கி, வெள்ளரி – 100 கிராம், பாகல், புடல் – 250 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரி உடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதை களை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு கரூர் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.ரமேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

விதைப்பரிசோதனை செய்து விதைகளை விதைப்பீர்! கூடுதல் மகசூல் பெறுவீர்!!

ஆடி மாதம் தொடங்கி, சில இடங்களில் மிதமாகவும் மற்றும் சில இடங்களில் அதிக அளவில் மழை பெய்து கொண்டு இருப்பதால், விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை விதைப்பிற்கு முன், விதைப் பரிசோதனை செய்து, அதன் தரத்தை உறுதி செய்து கொண்டு பின்னர் விதைக்கவும்.

விதையின் தரமானது அதன் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரக கலவன்கள் இல்லாமல் இருப்பது போன்ற காரணிகளால் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதிக முளைப்புத்திறன், கல், மண், தூசி இல்லாத மற்றும் உடையாத முழு விதைகள், அளவான ஈரப்பதம், பிற இரக கலப்பு இல்லாத, இனத்தூய்மையான விதைகளை விதைப் பரிசோதனையின் மூலம் உறுதி செய்து விதைக்கும் பொழுது அனைத்து விதைகளும் முளைத்து, பயிர் எண்ணிக்கை சரியான அளவில் பராமரிக்கப்படும் போது, மகசூலும் அதிகரிக்கிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு வருமானமும் அதிகரிக்கிறது.

விதைகளில் பிற இரக கலப்பு இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு விதைப்பதன் மூலம் பயிர்கள் சீரான வளர்ச்சியடைந்து ஒரே நேரத்தில் முதிர்ச்சி பருவத்தை அடைகின்றன. இதனால் அறுவடை எளிதாகிறது. தரமான விதை உற்பத்தியில், வயலில் கலவன்களை உரிய நேரத்தில் உரிய முறையில் நீக்கினால் மட்டும் விதைத்தரத்தைப் பேணிக் காக்க முடியும், நமது மாவட்டத்தில் நெல் பயிரில் சான்று விதை உற்பத்தி அதிகம் செய்யப்படுவதால் வயலில் கலவன்கள் ஏற்படாமல் இருக்க கீழ்க்கண்ட நடைமுறைகளை கடை பிடிக்கலாம்.

- சான்று பெற்ற விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை நிலையங்களிலிருந்து மட்டுமே வாங்கிப் பயன் படுத்துதல் வேண்டும்.

● அதிக அளவில் நெல் விதை வாங்கும்போது அனைத்து மூட்டைகளும் ஒரே இரகமாக உள்ளனவா எனக் கவனித்து வாங்க வேண்டும்.

● ஒவ்வொரு இரகத்தினையும் தனித்தனியே அறுவடை செய்து கதிரடித்து மற்றும் காயவைத்தல் வேண்டும்.

● களத்தினை நன்கு சுத்தம் செய்த பின்னரே நெல் விதைகளை உலர வைக்க வேண்டும்.

● நன்கு காய வைத்த விதைகளை புதிய கோணிகளில் மட்டுமே சேமித்து வைத்தல் வேண்டும். மேலும், இரக வாரியாக தனி அறையில் சேமிக்க வேண்டும். இவ்வாறு கடைபிடிப்பதால் நெல் விகைளில் கலவன்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளலாம்.

ஈரோடு விதைப் பரிசோதனை ஆய்வகத்தில், நீங்கள் உற்பத்தி செய்யும் விதைகளில் பிறஇரக விதைகள் கலந்து உள்ளனவா? என்பதை, இரகத்தின் குணநலன்களை கருத்தில் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப் படுகிறது.

எனவே, பிற இரக கலவன் உள்ளதா? என்று பரிசோதனை செய்த தரமான விதைகளை பயன்படுத்தி, கூடுதல் மகசூல் பெறலாம். இதற்காக விவசாயிகள் தங்களிடம் உள்ள விதை களில் 400 கிராம் அளவில் விதை மாதிரி எடுத்து, ரூ.80/- பரிசோதனைக் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவே அனுப்பி விதையின் தரத்தினை தெரிந்து கொண்டு, தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெறுமாறு ஈரோடு விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் த.ஆசைத்தம்பி மற்றும் இ.விஜயா கேட்டுக் கொள்கிறார்கள்.

அணுக வேண்டிய முகவரி : வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு வளாகம், வாய்க்கால் மேடு பேருந்து நிறுத்தம், பெருந்துறை ரோடு, பிச்சாண்டாம்பாளையம் (அஞ்சல்), ஈரோடு – 638 052. செல் நம்பர் : 99430 70720 மற்றும் 98652 72828.

நொதித்த அங்கக உரங்கள் குறித்த பயிற்சி மற்றும் இடுபொருட்கள் வழங்கும் விழா

கள்ளக்குறிச்சி, ஆக.11

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே உள்ள காளசமுத்திரம் வேளாண் அறிவியல் நிலையத்தில் மண் வளத்தை பெருக்குவதற்காக நொதித்த அங்க உரங்கள் பயன்பாடு குறித்து பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சிக்கு உழவியல் தொழில்நுட்ப வல்லுனர் மகேஸ்வரன் ஒருங்கிணைத்து வரவேற்புரை ஆற்றினார். முனைவர் கண்ணதாசன், இணை பேராசிரியர் மற்றும் தலைவர், தலைமை உரையாற்றி அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்

இந்த பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நொதித்த அங்கக உரங்களின் பண்புகள், அதை எவ்வாறு பயிர் களுக்கு பயன் படுத்துவது குறித்தும் நொதித்த அங்க உரங்கள் மூலமாக நெல் மற்றும் எள் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து மகேஸ்வரன், உழவியல் தொழில்நுட்ப வல்லுநர், பயிற்சி அளித்தார். மண்வள மேம்பாடு மற்றும் மண் பரிசோதனை முக்கியத்துவம் குறித்து முனைவர் மங்களதேவி, விளக்கம் அளித்தார்.

இயற்கை விவசாயத்தில் கால்நடையின் பங்கு மற்றும் கால்நடை கழிவுகளை எவ்வாறு உரமாக்குவது குறித்து மருத்துவர் வினோத் விளக்கினார். தோட்டக்கலை பயிர்களில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து முனைவர் தீபிகா கிருஷ்ண வேணி விளக்கினார். இயற்கை முறையில் விளைந்த பொருட் களை சந்தைப் படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டல் தொழில் நுட்பங்கள் குறித்து முனைவர் லாவண்யா விளக்கினார். நவீன மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை உணவுகள் குறித்து தாவூத் இப்ராஹீம், விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இயற்கை உரங்கள் தயாரிப்பது குறித்து பண்ணை மேலாளர் முனைவர் ஸ்ரீமதி, செயல் விளக்கம் காட்டினார். இணையவழி சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் குறித்து கணினி துறை அலுவலர் ரமணி, விளக்கினார்.

இந்த நிகழ்ச்சியில் 10 செயல் விளக்கங்கள் அமைப்பதற்கு பத்து விவசாயிகளுக்கு நொதித்த அங்கக உரங்கள் வழங்கப் பட்டது. நிகழ்ச்சியின் இறுதியாக மண் பரிசோதனை ஆய்வக தொழில்நுட்பர் ரம்யா நன்றியுரை ஆற்றினார்கள்.

கொண்டைக்கடலையின் (Cicer arietinum L.) உள்ளூர் ரகங்கள் – விரிவான கண்ணோட்டம்

1. அறிமுகம் :

கொண்டைக்கடலை (Cicer arietinum L.) உலகின் மிக முக்கிய மான பயறு வகைப் பயிர்களில் ஒன்றாகவும், தாவரப் புரதத்தின் முக்கிய ஆதாரமாகவும் விளங்குகிறது. இது சுமார் 10,000 ஆண்டு களுக்கு முன்பு அண்மை கிழக்குப் பகுதியின் 'வளமான பிறை' (Fertile Crescent) மண்டலத்தில் பயிரிடத் தொடங்கப்பட்டு, பின்னர் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்கள் முழுவதும் பரவியது.

நவீன ரகங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்பு, விவசாயிகள் உள்ளூர் ரகங்களைப் பயிரிட்டு வந்தனர். இவை பல தலைமுறை களாக விவசாயிகளின் தேர்வு மூலம் பராமரிக்கப்பட்டு, உள்ளூர் சூழலுக்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொண்ட பாரம்பரிய ரகங் களாகும். இந்த உள்ளூர் ரகங்கள் அபாரமான மரபணு பன்முகத் தன்மையைக் கொண்டுள்ளன; மேலும் பின்வரும் பண்புகளுக் கான மரபணுக்களின் மதிப்புமிக்க ஆதாரங்களாகவும் இவை திகழ்கின்றன: வறட்சியைத் தாங்கும் திறன், வெப்பத்தைத் தாங்கும் திறன், நோய் எதிர்ப்புத் திறன், ஊட்டச்சத்துத் தரம், உள்ளூர் சூழலுக்கு ஏற்ப தகவமைத்தல், அழுத்தமான சூழலிலும் நிலையான மகசூல் அளித்தல். காட்டு வகை கொண்டைக்கடலை இனங் களுக்கும் நவீன மேம்படுத்தப்பட்ட ரகங்களுக்கும் இடையே உள்ளூர் ரகங்கள் ஒரு பாலமாகச் செயல்படுகின்றன. நவீன இனப்பெருக்க முறைகளால் மரபணு பன்முகத்தன்மை கணிசமாக இழக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன; எனவே, எதிர்காலப் பயிர் மேம்பாட்டிற்குத் தேவையான பயனுள்ள மரபணுக்களைக் கொண்ட களஞ்சியங்களாக உள்ளூர் ரகங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

கொண்டைக்கடலை உள்ளூர் ரகங்களின் முக்கிய வகைகள்

A. தேசி (Desi) கொண்டைக்கடலை உள்ளூர் ரகங்கள்

பண்புகள் :

- சிறிய விதைகள்
- கோண வடிவ அமைப்பு
- தடிமனான விதை உறை
- பழுப்பு, கருப்பு, பச்சை அல்லது புள்ளிகள் கொண்ட நிறங்கள்
- அதிக நார்ச்சத்து உள்ளடக்கம்

B. காபுலி (Kabuli) கொண்டைக்கடலை உள்ளூர் ரகங்கள்

பண்புகள் : பெரிய விதைகள், கிரீம் நிற விதை உறை, மென்மையான மேற்பரப்பு, அதிக சந்தை மதிப்பு



C. கருப்பு கொண்டைக்கடலை (Ceci Neri)

பண்புகள் : கருப்பு விதை உறை, அதிக ஆன்டிஆக்ஸிடன்ட் உள்ளடக்கம், பாரம்பரிய இத்தாலிய நாட்டு ரகம்.

இனவிருத்தியில் கொண்டைக்கடலை நாட்டு ரகங்களின் முக்கியத்துவம்

வறட்சியைத் தாங்கும் தன்மை, வெப்பத்தைத் தாங்கும் தன்மை, நோய் எதிர்ப்புத் திறன்.

கொண்டைக்கடலையின் முக்கிய நோய்கள்

ஃபுசாரியம் வாடல் நோய், அஸ்கோகைட்டா கருகல் நோய், உலர் வேர் அழுகல் நோய், போட்ரிடிஸ் சாம்பல் பூஞ்சணம்.

எத்தியோப்பியன் கொண்டைக்கடலை நாட்டு ரகங்கள்

200-க்கும் மேற்பட்ட எத்தியோப்பியன் நாட்டு ரகங்கள் மீதான ஆராய்ச்சி காட்டியது பூக்கும் நேரத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு, விதை அளவில் வேறுபாடுகள், உள்ளூர் சூழல்களுக்கு அதிக ஏற்புத்திறன், மதிப்புமிக்க எதிர்ப்புப் பண்புகள்.

கொண்டைக்கடலை நாட்டு ரகங்களின் பாதுகாப்பு

இடவெளிப் பாதுகாப்பு

மரபணு வங்கிகள் ஆயிரக்கணக்கான மாதிரிகளைப் பராமரிக்கின்றன.

முக்கியமான சேகரிப்புகளில் அடங்குபவை

- ஐசிஆர்ஐஎஸ்ஏடி (ICRISAT)
- ஐசிஏஆர் (ICAR)
- வாவிலோவ் தாவர மரபணு வளங்கள் நிறுவனம்

பண்ணை அளவிலான பாதுகாப்பு

விவசாயிகள் பின்வரும் வழிகளில் உள்ளூர் நாட்டு ரகங்களைத் தொடர்ந்து பராமரித்து வருகின்றனர்.

விதை சேமிப்பு, பாரம்பரியத் தேர்வு, சமூக விதை வங்கிகள், பருவநிலைக்கேற்ற ரகங்கள், அதிக மகசூல் தரும் இரகங்கள், இட நெருக்கடியைத் தாங்கும் பயிர்கள், ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட கொண்டைக்கடலை.

முடிவுரை :

கொண்டைக்கடலை நாட்டு ரகங்கள் என்பவை, விவசாயிகளால் பாரம்பரியமாக உருவாக்கப்பட்ட இனத்தொகுதிகளாகும். இவை மரபணுப் பன்முகத்தன்மையின் வளமான ஆதாரமாக விளங்கு கின்றன. அவை விதைகளின் பண்புகள், வளர்ச்சிப் பழக்கங்கள், இட நெருக்கடியைத் தாங்கும் திறன் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காட்டுகின்றன. தென்மேற்கு ஆசியா, தெற்காசியா, எத்தியோப்பியா மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளைச் சேர்ந்த தேசி, கபூலி மற்றும் பிராந்திய நாட்டு ரகங்கள் நவீன கொண்டைக்கடலை இனப்பெருக்கத்திற்கு அடித்தளமாக அமைகின்றன. உற்பத்தித்திறனையும் ஊட்டச்சத்துத் தரத்தையும் தக்கவைத்துக்கொண்டு, பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய எதிர்காலக் கொண்டைக்கடலை இரகங்களை உருவாக்குவதற்கு இந்த நாட்டு ரகங்களைப் பாதுகாப்பதும் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

தகவல் : ***வி.க.ஹேறாம் ஹறிணி வாசம், சு.கீர்த்தனா, இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கழகம், துறையூர்.***

Rithvik Pipe

IS 4985 : 2021

IS 9537

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

கோகிலாபுரத்தில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நிகழ்ச்சி

தேனி, ஆக.11

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோகிலாபுரம் கிராமத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் சார்பில், கிராம தங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (PRA - Participatory Rural Appraisal) நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கிராம விவசாயிகளுடன் இணைந்து கிராமத்தின் முக்கிய வேளாண் வளங்கள், அவற்றின் பயன்பாடு மற்றும் கிடைப்பிடம் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், கிராமத்தின் முக்கிய வேளாண் வளங்களை அடையாளம் காணும் வகையில் வேளாண் வள வரைபடம் (Resource Map) தயாரிக்கும் செயல்முறை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில் வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் சாண்டியோ சாஜி, ஆனந்தமரி ராஜ், செல்லத்துரை, கஜேந்திரன், வஜில் மற்றும் நந்தகோபாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று, விவசாயிகளுடன் கலந்துரையாடி, வேளாண் வளங்கள் மற்றும் வள வரைபடத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

சம்பா பருவத்திற்கு பயன்படுத்தவுள்ள விதைகளின் முளைப்புத்திறனை அறிந்து விதை செலவினை குறைக்க வழிமுறைகள்

விழுப்புரம், ஆக.11

விவசாயிகள் சம்பா பருவத்திற்கு பயன்படுத்தவுள்ள விதை களின் முளைப்புத்திறனை அறிந்து விதை செலவினை குறைப் பதற்கான வழிமுறைகளை விழுப்புரம், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.சோபனா தெரிவித்துள்ளார்.

நெல் விதைகளை அறுவடைக்குப் பின் சேமித்து வைத்து அதனை அடுத்த பருவத்தில் மீண்டும் விதையாக பயன் படுத்துவது விவசாயிகளிடையே நடைமுறையில் உள்ள வழக்க மாகும். ஐம்பது சதவிகித விவசாயிகள் தங்கள் சொந்த விதை சேமிப்பிலிருந்தே அடுத்த பருவத்திற்கு விதை நெல்லை விதைக்கிறார்கள்.

மேலும் விதைப்பதற்கு முன் அவ்விதையின் முளைப்புத்திறன் அறிந்து விதைப்பு செய்வது மிகவும் அவசியமாகும். முளைப்புத் திறன் அறியாமல் விதைப்பதனால் விதையளவை அதிகமாக உபயோகப்படுத்த நேரிடுவதோடு செலவும் அதிகரிக்கும்.

எனவே விதையின் முளைப்புத் திறனைமுன்பே அறிந்து கொண்டுபின்னர் விதைப்பு மேற்கொள்வதன் மூலம் விதையின் அளவை முளைப்புத்திறனுக்கு ஏற்றவாறு சரியாக கணக்கிட்டு பயன்படுத்த முடியும். இதன் மூலம் நாற்று பற்றாக்குறை இல்லாமல் தேவையான வளமான நாற்றுக்களைப் பெற்று நடவு மேற்கொள் வதோடு, நடவு வயலில் சரியான அளவில் பயிர் எண்ணிக்கையை பராமரித்து அதிக மகசூல் பெறலாம்.

மேலும் விதையின் தரத்தினை அறிய விரும்பும் விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள ஒவ்வொரு விதைக்குவியலில் இருந்தும் 100 கிராம் விதை மாதிரியினை இரகம் வாரியாக எடுத்து, விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தின் முதல் தளத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து ஆய்வு முடிவுனை அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரியின் பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணம் ரூ.80/- ஆகும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

நிலக்கடலைப் பயிரில் 'வயல்வெளிப் பள்ளி' செயல்விளக்கம்!

தஞ்சாவூர், ஆக.11

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷியா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் சப்னா ஆகியோர், தங்களது கிராமப் புற வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE - Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட நாகப்பனுடையன்பட்டி பகுதியில் உள்ள விவசாயிகளின் நிலக்கடலை வயலில் 'வயல்வெளிப் பள்ளி' செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்வில் TNAU Groundnut Rich பயன்படுத்தி நிலக்கடலைப் பயிரில் நேரடி செயல்விளக்கம் மேற்கொள்ளப்பட்டது.

விவசாயிகளின் வயலில் இதனைத் தெளித்து, அதன் பயன்பாடு, முக்கியத்துவம் மற்றும் நிலக்கடலைப் பயிரின் வளர்ச்சியில் ஏற்படுத்தும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது. மேலும், நிலக்கடலைப் பயிரில் சிறந்த வளர்ச்சி, முறையான ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மகசூல் மேம்பாட்டிற்கான தொழில்நுட்பங்களை உரிய முறையில் பின்பற்றுவதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இச்செயல்விளக்கத்தின் மூலம் TNAU Groundnut Rich-ன் பயன்பாடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து பயனுள்ள தகவல்களை அறிந்து கொண்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், வயல்வெளியில் நேரடியாக செயல் விளக்கம் அளித்து, பயனுள்ள வேளாண் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொண்ட மாணவிகளுக்கு விவசாயிகள் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

காளையார்கோவில் வட்டாரத்தில் மண் வள மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, ஆக.11

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டாரத்தில் வேளாண் மைத் துறை சார்பில் அட்மா (2026-27) - மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாந்தாளி கிராமத்தில் மண் வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சிக்கு சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) செல்வம், தலைமை வகித்து கலந்து கொண்டு மண் வள மேலாண்மை என்பது மண்ணின் இயற்கை வளத்தையும், பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளையும் பாதுகாத்து நீண்ட காலத்திற்கு அதிக மகசூல் பெற உதவும் என்றும், மண் ஆய்வுக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவங்கள் மண் மாதிரி எடுக்க கூடாத இடங்கள் மற்றும் மண் ஆய்வு செய்வதற்கு அனுப்ப வேண்டிய விபரங்கள் குறித்து எடுத்து கூறினார். மண் வள அட்டை பயன்படுத்தி பயிர் களுக்கு உரமிடுமாறு அறிவுரை கூறினார். மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும், மண்ணின் உள்ள களர், உவர், அமிலத்தன்மையை கண்டறிந்து அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிர் செய்ய வேண்டும் என்று எடுத்து கூறினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தைப்பத்துல் ஆசிபா, பயிர்களில் அதிக மகசூல் பெற மண்ணில் தேவையான ஊட்ட சத்துகள் சரியான அளவில் கிடைப்பதால் பயிர்களின் வளர்ச்சியும் மகசூல் அதிகரிக்கும் என்றும், மண் வளம் பாதுகாக்க கரிம உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் பயிர் கழிவுகளை பயன் படுத்துவதன் மூலம் மண் வளம் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது என்றும், மண்ணில் கரிமப் பொருட்கள் அதிகரிப்பதால் நீரை தக்க வைத்து கொள்ளும் திறன் மேம்படுத்துகிறது. மண் அரிப்பு கட்டுபடுவதற்கு மூடு பயிர்கள், பயிர் கழிவுகள் மற்றும் சரியான நில மேலாண்மை முறைகள் மூலம் மண் அரிப்பு குறைக்கப்படுகிறது என்றும் மற்றும் நிலையான வேளாண்மைக்கு இயற்கை வளங்களை பாதுகாத்து தொடர்ந்து பல ஆண்டுகள் நல்ல மகசூலை பெறுவதற்கு மண் வள மேலாண்மை உதவுகிறது என்று எடுத்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் குணசேகரன் (வேளாண்மை அலுவலர் ஒய்வு) மண் வள மேலாண்மையில் மண்ணில் இடக்கூடிய இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் அவற்றைப் பயன்படுத்தும் தொழில் நுட்பங்களான தொழுஉரம், கம்போஸ்ட் உரங்களான தாவரக் கழிவுகளை மக்கச் செய்து தாயரித்து விதைப்பதற்கு முன் மண்ணில் இடுதல் வேண்டும், பசுந்தாள் உரங்களான சணப்பை, தக்கைப்பூண்டு போன்ற பயிர்களை வளர்த்து, பூக்கும் பருவத்திற்கு முன் மண்ணில் உழுதுதல் வேண்டும் என்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, அசோட்டோ பாக்டர் போன்றவற்றை பரிந்துரைக்கப்பட்ட முறையில் பாதுகாத்தல், அறுவடைக்குப் பின் கிடைக்கும் தாவர கழிவுகளை எரிக்காமல் மக்கச் செய்து மண்ணில் சேர்த்தல் என்றும் தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். நுண்ணூட்டச் சத்து உரங்களை துத்துநாகம், போரான், இரும்பு போன்று நுண்ணூட்டச் சத்துகளை இட வேண்டும் என்று எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார உதவி வேளாண்மை அலுவலர் சித்ரா, வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள நெல் இரகங்களான கோ 51, கோ 55, TKM 15 மற்றும் RNR இரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12.5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட்களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார்.

மேலும், விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்பங்களான சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, அட்மா திட்ட விரிவாக எடுத்து கூறியும் வேளாண் இடுபொருட்கள் நுண்ணூட்டம் இடும் முறை பற்றி பேசினார். வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும், திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் இவைகளை பயன்படுத்தி பயிர்களில் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உழவர் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் காளிஸ்வரி பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்தார்.

ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396